*Translation*

TIP/SS/01/03 2019.11.13

**வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் : 1/2018 (4)**

சனாதிபதி செயலாளர்,
பிரதமரின் செயலாளர்,
அமைச்சரவையின் செயலாளர்,
ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்டமுறை நிறுவனங்களின் தலைவர்கள் யாவருக்கும்.

**<u>சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்கும் திட்டம்</u>**

சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது இரண்டு அனுமதிப்பத்திரங்களுக்கிடையிலான காலத்தைப் பரிசீலிப்பதற்காக தற்சமயம் அடிப்படையாகக் கொள்ளப்படும் "கடன் கடிதம் திறக்கப்பட்ட / உள் நாட்டில் தயாரிக்கப்பட்ட வாகனம் ஒன்றிற்காக முதலாவது கட்டணம் செலுத்தப்பட்ட திகதிக்குப்" பதிலாக அனுமதிப் பத்திரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் அமைச்சின் செயலாளர் / உரிய அதிகாரம் பெற்றவரால் ஒப்பமிடப்பட்ட திகதியை பயன்படுத்துவதற்கு 2019.06.25 ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

02. அதன் பிரகாரம் 2015.11.21 ஆம் திகதி முதல் செயல்வலுப் பெறுமாறு "கடன் கடிதம் திறக்கப்பட்ட / உள் நாட்டில் தயாரிக்கப்பட்ட வாகனம் ஒன்றிற்காக முதலாவது கட்டணம் செலுத்தப்பட்ட திகதிக்குப்" பதிலாக "அனுமதிப் பத்திரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் அமைச்சின் செயலாளர் / உரிய அதிகாரம் பெற்றவரால் ஒப்பமிடப்பட்ட திகதி" எனும் ஏற்பாடு உள்ளடக்கப்பட்டு வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இத்தால் திருத்தம் செய்யப்படுகிறது.

03. 8.2.vi ஆக பின்வரும் பிரிவு உள்ளடக்கப்படுகிறது.

"8.2.vi மேலே குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவம், அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அதன் ஒளிப்படப் பிரதி ஒன்றை குறித்த உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவையில் சேர்த்தல் வேண்டும்.

04. மேலுள்ள சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் மாறாது இருக்கும்.

05. 2019.07.08 ஆம் திகதிய 1/2018/(3) எனும் இலக்கத்தைக் கொண்ட வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இத்தால் இரத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்: **ஆர்.எச்.சமரதுங்க**

பொதுத் திறைசேரியின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர்

பிரதி:

| | | |
|---|---|---|
| 01. | கணக்காய்வாளர் அதிபதி | - உரிய நடவடிக்கைக்காக |
| 02. | மத்திய வங்கியின் ஆளுநர் | - உரிய நடவடிக்கைக்காக |
| 03. | பணிப்பாளர் நாயகம், வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | - மேற்குறித்தவாறு செயற்படுவதற்காக |
| 04. | பணிப்பாளர் நாயகம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | - உரிய நடவடிக்கைக்காக |
| 05. | பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கத் திணைக்களம் | - உரிய நடவடிக்கைக்காக |
| 06. | பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைத் திணைக்களம் | - உரிய நடவடிக்கைக்காக |
| 07. | பணிப்பாளர் நாயகம், பொதுத் தொழில்முயற்சித் திணைக்களம் நடவடிக்கைக்காக | - உரிய நடவடிக்கைக்காக |
| 08. | ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் | - உரிய நடவடிக்கைக்காக |
| 09. | ஆணையாளர் நாயகம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | - உரிய நடவடிக்கைக்காக |
| 10. | பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் | - உரிய நடவடிக்கைக்காக |